# யா/நெல்லியடி மத்திய கல்லூரி
## தேசிய பாடசாலை

# வருடாந்தப் பரிசளிப்பு விழா
## - 2013 -

( பழைய மாணவர் சங்க அனுசரணையுடன் )

தலைவர்

**திரு.செ.சேதுராஜா அவர்கள்**

அதிபர்

பிரதம விருந்தினர்

**கலாநிதி த.கலாமணி Ed D(Wollongong, Australia) அவர்கள்**

(பழைய மாணவர், சிரேஷ்ட விரிவுரையாளர் – கல்வியியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்)

பரிசில் வழங்குனர்

**திருமதி.குயின் ஜெசீலி கலாமணி அவர்கள்**

## 2014.09.27

தொலைபேசி இல.: 021 226 3017, தொலைநகல் : 021 226 4141, இணையத்தளம் : nelliadycentral.com , மின்னஞ்சல் : nelliadymmv@gmail.com

## யா/நெல்லியடி மத்திய கல்லூரி - தேசிய பாடசாலை

# பரிசளிப்பு விழா - 2013

## அதிபர் அறிக்கை

வணக்கத்துக்குரிய மதத் தலைவர்களே! சிறப்புமிகு இப்பரிசுநாள் நிகழ்வில் முதன்மை விருந்தினரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் சிரேஷ்ட விரிவுரையாளரும் இக்கல்லூரியின் புகழ்மிக்க மைந்தனுமாகிய “கலைவாரிதி” கலாநிதி கலாமணி அவர்களே! அவர்தம் அன்புப் பாரியாரும் சிரேஷ்டநிலை ஆசிரியையுமான திருமதி.குயின் ஜெசீலி கலாமணி அவர்களே! எமது மதிப்புக்குரிய வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.சிவபாதம் நந்தகுமார் அவர்களே! பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் திரு.இளையதம்பி ஜயாத்துரை அவர்களே! பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்களே! பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே! பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே! உதவிக் கல்விப் பணிப்பாளர்களே! மதிப்பு மிகு அதிபர்களே! ஆசிரிய ஆலோசகர்களே! நிர்வாக உத்தியோகத்தர்களே! அன்பான பெற்றோர்களே! கல்லூரியின் இயக்குநர்களான ஆசிரியர்களே! மாணவர் தலைவர்களே! அனைத்து மாணவச் செல்வங்களே! கல்லூரியின் பழைய மாணவர்களே! இங்கு வருகை தந்திருக்கும் நிறுவனங்களின் தலைவர்களே! நலன்விரும்பிகளே! பெரியோர்களே! தாய்மார்களே! உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

மாணவச் செல்வங்களுக்கு மதிப்பளிக்கும் இன்றைய நிகழ்விலே முதன்மை விருந்தினராகப் பங்கேற்று தனது கல்லூரித் தாய்க்கு மகுடம் அணிவித்துக் கொண்டிருக்கும் கல்வியியலாளரும் கலை இலக்கியகர்த்தாவும் சிறந்த சமூக நலன் விரும்பியுமாகிய கலாநிதி.தம்பிஜயா கலாமணி அவர்களதும் அவர்தம் பாரியாரதும் வருகையினாலும் மனமகிழ்ந்த பங்கேற்பினாலும் கல்லூரிச் சமூகம் மட்டில்லா மகிழ்வடைவதுடன் கல்லூரித்தாய் மகிழ்ச்சிப் பூரிப்பும் பெற்றுள்ளாள். கலாநிதி கலாமணி அவர்கள் தனது கல்லூரி மீது மட்டில்லா அன்பும் அபிமானமும் அதன் வளர்ச்சியிலே தணியாத தாகமும் கொண்டவர். தனது வாழ்க்கை முறையிலும் செயற்பாடுகளிலும் தான் கல்வி கற்ற, தனது தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்த களமாகிய கல்லூரிக்கு முதல் முன்னிடம் வழங்குபவராவார். தனது ஆரம்பக் கல்வியை யா/தேவரையாளி இந்துக் கல்லூரியிலும் 5ம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தபின், வாழ்வுக்கு வலுச் சேர்த்த இரண்டாம் நிலைக் கல்வியை புகழ்பூத்த இக்கல்லூரியிலும் மேற்கொண்டு விஞ்ஞானத் துறையிலே தேறி பேராதனைப் பல்கலைக்கழகம் சென்று தனது விஞ்ஞானமாணிப் பட்டப் படிப்பினை நிறைவு செய்தார். ஆரம்பத்தில் பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் இவ்விரண்டு வருடங்கள் பௌதிகவியலில் தற்காலிக விரிவுரையாளராகவும் யா/சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் 11 ஆண்டுகள் பௌதிகவியல் ஆசிரியராகவும் பணியாற்றியிருந்ததோடு கல்வித்துறையில் அவர் கொண்டுள்ள திறமை மற்றும் பாடப் புலமை காரணமாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கல்வியியற்றுறை

விரிவுரையாளராக 1992ஆம் ஆண்டில் நியமனம் பெற்று நாடளாவிய ரீதியில் ஆசிரியர்களுக்கு குறிப்பாக தமிழ் பேசும் ஆசிரியர்களுக்கு தொழில் வலுவூட்டும் ஒரு ஆசானாகத் திகழ்ந்து வருகின்றார். இவர் வினைத்திறன் மிக்க விரிவுரையாளராக பணியாற்றிக்கொண்டே தனது வாண்மை நிலையினையும் விருத்தி செய்து அவுஸ்திரேலியாவின் “வொலங்கொங்” பல்கலைக் கழகத்தில் தனது கலாநிதிப் பட்டத்தினையும் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார். கல்விக்கும் கலைக்கும் அரும்பணியாற்றிவரும் இக்கல்லூரி மைந்தன் எந்நிலையிலும் தனது கல்லூரித் தாயை அன்போடு நேசித்து தனது அனைத்துப் புதல்வர்களையும் இக்கல்லூரியிலேயே அனுமதி பெற்று கல்வி கற்க வைத்தமை கல்லூரித்தாய் மீது அவர் கொண்டுள்ள அபிமானத்துக்கும் பற்றுறுதிக்கும் நல்ல எடுத்துக் காட்டாகும். அவரது இன்றைய பங்கேற்பு அவருக்கும் எமக்கும் மனநிறைவு தரும் மகிழ்ச்சி மிகு நிகழ்வாகும். அவரையும் அவர்தம் பாரியாரையும் கல்லூரிச் சமூகம் அகமகிழ்ந்து வரவேற்கின்றது.

தனித்துவமான வரலாற்றுச் சுவட்டினையும் கலாசாரப் பாரம்பரியத்தினையும் கொண்ட இக்கல்லூரியானது இன்று இலங்கைத் திருநாட்டிலுள்ள தலைசிறந்த கல்லூரிகளுக்குரிய அடைவுச் சுட்டிகளோடு தலைநிமிர்ந்து நிற்கின்றது. இக்கல்லூரியின் வளர்ச்சிப் பாதையானது பல செழிப்புக்களையும் தளர்வுகளையும் மாறி மாறி கண்டதும் வெற்றி கொண்டதுமாக அமைந்துள்ளதனை கல்விப் புலமும் இக்கல்லூரிச் சமூகமும் நன்கறியும். 1921இல் ஒரு அரசாங்க மாதிரிப்பாடசாலையாக உருப்பெற்று 1950களில் நீண்ட காலத் திட்டமிடல் மற்றும் வள ஒதுக்கீடுகளின் அடிப்படையில் இலங்கையில் இலவசக் கல்விக்கும் தரமான கல்விக்கும் வித்திட்ட கலாநிதி CWW.கன்னங்கரா அவர்களின் முன்மொழிதலால் வடமராட்சிப் பிரதேசத்துக்குரிய ஒரேயொரு மத்திய மகா வித்தியாலயமாக வலுப்பெற்றது. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் கிராமப்புற மாணவர்களை நாடளாவிய ரீதியில் உள்வாங்கி விடுதி வசதியளித்து சகலதுறைசார் தரம்மிக்க கல்வியை வழங்கி சாதனை படைத்த இக்கல்லூரியானது தன்னால் வளம்பெற்று உயர்நிலையடைந்த மாணவச் செல்வங்களை நாடளாவிய ரீதியில் கொண்டுள்ளமை இக்கல்லூரிக்கேயுரிய சிறப்பம்சமாகும்.

கல்வியியலாளர்களால் இன்று மீண்டும் உணரப்பட்டு உணர்த்தப்படும் கலவன் பாடசாலை கருத்தியலையும் அதனால் மாணவர்கள் அடையப்பெறும் சிறந்த தலைமைத்துவப் பண்புகளையும் அன்றேயுணர்ந்து உருவாக்கப்பட்ட மத்திய மகா வித்தியாலயங்களில் சிறப்பிடம் பெற்ற இக்கல்லூரியானது இப்பிரதேசத்தில் ஒரு சமூக உருவாக விளங்கியது. எல்லா வகை மாணவர்களும் அனைத்துச் சமூகத்தினரும் அனைத்து மதத்தினரும் ஒன்றிணைந்து கல்விகற்று பயனடைந்த களமாக இக்கல்லூரி திகழ்ந்ததெனின் மிகையாகாது. சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு மாணவர்கள் கல்வி கற்கக்கூடிய வளவசதிகளைக் கொண்டிருந்த இப்பாடசாலையானது விஞ்ஞானம், கலை, வர்த்தகம் முதலான அனைத்துத் துறைகளிலும் மாணவர்களுக்குக் கல்வி புகட்டுவதிலும் பல்கலைக் கழகங்களுக்கு அவர்களை தகுதி பெறச் செய்வதிலும் முன்னிலை வகித்தது. சாரணியம், கடேற் முதலானவை உள்ளிட்ட இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் கலை சார்ந்த வெளிப்பாடுகளிலும் முன்னிலை வகித்த இக்கல்லூரியானது தகுதியும் நிர்வாகத் திறனும் மிக்க பல அதிபர்களாலும் பிரதி அதிபர்களாலும் வாண்மை மிகு ஆசிரியர்களாலும் வலுப்பெற்றிருந்த வரலாற்றைக் கொண்டதாகும்.

இடைக்காலத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளாலும் சமூக ஈடாட்டங்களினாலும் தன் செயற்பாடுகளில் தளர்வினையும் வளநிலையில் நலிவினையும் எதிர்நோக்கிய போதும் கல்லூரி தனது தோற்றத்திலும் அமைப்பிலும் பெற்றுக்கொண்ட முதல் நிலையை இழந்துவிடாதபோதிலும் மாணவர் தொகையிலும் செயற்பாடுகளிலும் நலிவினையும் மந்த நிலையினையும் கொண்டிருந்தபோதிலும் கல்லூரியின் பல்துறை சார்ந்த சமூகப் பங்களிப்பும் முக்கியத்துவமும் நிலைபெற்றிருந்ததெனலாம். 1990களின் அரம்பத்தில் கல்லூரி செயற்கையான சில பின்னடைவுகளைச் சந்தித்த போதிலும் அதன் பின்னர் மீண்டும் நந்நிலை நோக்கி நகரத்தொடங்கியது. தொடர்ந்து வந்த அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் அர்ப்பணிப்பான சேவையினால் மீண்டும் முகிழ்த்தெழுந்த கல்வி வெளிப்பாடுகளால் கல்லூரி வளம்பெறத் தொடங்கிற்று. கடந்த ஒரு தசாப்த காலத்தில் கல்லூரியானது தனது செழிப்புறு முன்னைய நிலையினை எட்டிப் பிடித்துள்ளமை எல்லோராலும் அவதானித்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விடயமாயுள்ளது.

மாணவர் எண்ணிக்கையிலும் பாடவிதான, இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் வள வசதிகளிலும் மாணவர் ஒழுக்கசீலத்திலும் விரைந்த வளர்ச்சிப் போக்கினை காட்டிவரும் இக்கல்லூரியானது தனித்துவமான முகாமைத்துவக் கலாசாரத்தோடு தலைநிமிர்ந்து நிற்கின்றது. நாட்டிலுள்ள அங்கீகாரம் பெற்ற 54 மத்திய மகா வித்தியாலயங்களில் ஒன்றான இக்கல்லூரியானது அதன் மாணவர் எண்ணிக்கை வீழ்ச்சியால் தவறவிடப்பட்ட "தேசியப் பாடசாலை" என்னும் அந்தஸ்தை பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை நலன்விரும்பிகளின் அங்கீகாரத்தோடு 2011 ஒக்ரோபர், 06 இல் ஒரு தேசியப் பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டு வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள ஒரேயொரு தேசியப் பாடசாலை என்னும் அந்தஸ்தினையும் இக்கல்லூரி பெற்றுக்கொண்டது. மேலும் இலங்கையின் இரண்டாவது கல்விப் புரட்சியென வர்ணிக்கப்படுவதும் தற்போது நாடளாவியரீதியில் தெரிவு செய்யப்பட்ட 1AB 1000 பாடசாலை செயற்றிட்டத்திலும் க.பொ.த.(உ/த)இல் தொழினுட்ப பீடத்தினை அமைக்கும் செயற்றிட்டத்திலும் (250 - 1AB Super பாடசாலைகள்) இக்கல்லூரியானது உள்வாங்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் சுமார் 10 மில்லியன் ரூபா செலவில் நவீன வசதிகள் கொண்ட "மஹிந்தோதய" ஆய்வுகூடம் அமைக்கப்பட்டு திறப்பு விழாவுக்கு தயார் நிலையிலுள்ளது. அத்துடன் நாட்டிலுள்ள 250 - 1AB Super பாடசாலைகளில் விரைந்து அமைக்கப்பட்டுவரும் "மஹிந்தோதய" தொழினுட்ப பீடங்கள் அமைக்கும் செயற்றிட்டத்தின் கீழ் எமது கல்லூரியிலும் சுமார் 30 மில்லியன் ரூபா செலவில் இரண்டு மாடிகளையும் சகல வசதிகளையும் கொண்ட தொழினுட்ப பீடம் அமைக்கப்பட்டு வருவதுடன் அத்தொழினுட்ப பீடத்திற்கென சுமார் 30 மில்லியன் பெறுமதியான தளபாடங்களும் உபகரணங்களும் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இத்தொழினுட்ப பீடத்திற்கான அடிக்கல்லினை கடந்த 2014.06.24 அன்று கௌரவ பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் உயர்திரு.K.N.டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நாட்டி செயற்றிட்ட வேலைகளை ஆரம்பித்து வைத்தார். க.பொ.த.(உ/த) தொழினுட்பப் பிரிவில் கல்வி பயின்று கொண்டிருக்கும் மாணவர்களில் முதலணியினர் எதிர்வரும் 2015 ஓகஸ்ட் மாதத்தில் நடைபெறவுள்ள க.பொ.த.(உ/த)ப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர் என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கல்லூரி மாணவர்கள் கல்வியிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் கடந்த

அண்டிலும் இவ்வாண்டின் ஆரம்பத்திலும் பெற்றுள்ள அடைவுகள் மற்றும் சாதனைகள் பாராட்டத்தக்கனவாகும். 2013 டிசம்பர் க.பொ.த(சா/த)ப் பரீட்சையில் 3 மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் "A" தரச் சித்திகளைப் பெற்றதோடு 6 மாணவர்கள் 8 பாடங்களில் "A" தரச் சித்திகளைப் பெற்றுள்ளனர். க.பொ.த.(உ/த)ப் பரீட்சையின் அடிப்படையில் 31 மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கான தகுதியினைப் பெற்றுள்ளனர். வடமராட்சிக் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளிடையே க.பொ.த.(சா/த)ப் பரீட்சையில் கணித பாடத்தின் சித்தி வீதத்தில் தொடர்ச்சியான சிறந்த வளர்ச்சிப் போக்கினை வெளிப்படுத்தியமைக்காகவும் குறித்த பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் சிறந்த பெறுபேற்று வளர்ச்சியைக் காட்டியமைக்காகவும் இவ்வாண்டுக்கான ஆவணித் திங்கள் "நிறைமதி கலை விழாவில்" இரு விருதுகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இது எமது கல்லூரி ஆசிரியர்களது அர்ப்பணிப்பான சேவைக்கும் மாணவர்களது திறன் வளர்ச்சிக்கும் கிடைத்த வெற்றியாகும்.

இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் எமது கல்லூரியில் 8 பெண் மாணவர்களும் 2 ஆண் மாணவர்களும் ஜனாதிபதி சாரணர் விருதினைப் பெற்று இவ்வாண்டில் சாதனை படைத்தனர். இலங்கைப் பாடசாலைகள் துப்பாக்கி சுடும் விளையாட்டுக் கழகத்தினால் (Sri Lanka School Shooting Sports Association) நடத்தப்பட்ட வாயுத் துப்பாக்கி (Air Rifle) சுடும் போட்டிகளில் பல மட்டங்களில் சிறப்பான அடைவினைக் காட்டி தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட அணியில் இடம் பிடித்துள்ள எமது மாணவிகளான செல்வி.தயானி ஸ்ரீசிதம்பரலிங்கம், செல்வி.பிரதீபா குமாரவேல் ஆகியோர் "ஹொலண்ட்" நாட்டில் நடைபெறவுள்ள சர்வதேச துப்பாக்கி சுடும் போட்டியில் இலங்கை சார்பில் செல்லவுள்ளனர் என்பதனை மிக்க மகிழ்ச்சியோடு அறியத் தருகின்றேன். இவைதவிர மாணவர்களுக்கு அதிகளவான இணைப்பாடவிதானப் பங்குபற்றல் சந்தர்ப்பங்களையும் அவை தொடர்பான அறிவினையும் வழங்கவேண்டும் என்னும் நவீன கல்விச் சிந்தனைகளின் அடிப்படையில் முடிந்தவரை நாம் அதிக எண்ணிக்கையான இணைப்பாடவிதான நிகழ்வுகளை அறிமுகம் செய்துள்ளதோடு பயிற்சிகளையும் வழங்கி வருகின்றோம். பாடசாலை மட்டம் முதல் தேசிய மட்டம் வரை பல்வேறு விளையாட்டுக்களிலும் ஏனைய இணைப்பாடவிதான நிகழ்வுகளிலும் ஆண், பெண் அடங்கலான எமது மாணவர்கள் பங்கேற்று வெற்றிகளையும் பெற்று வருகின்றனர். விளையாட்டுக்களும் முதன்மையும் தொடர்பான அரசின் புதிய முன்மொழிவுகளுக்கமைவாக பாடவிதான அடைவுகளோடு உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு முதன்மை நிலை என்பவற்றுக்கான அடைவுப் புள்ளிகளையும் உள்ளடக்கி மாணவர் தேர்ச்சி அறிக்கைகளை இவ்வாண்டிலிருந்து (2014) வழங்கி வருகின்றோம். இதனால் இது தொடர்பான விழிப்புணர்வு மாணவர்களிடையேயும் ஆசிரியர்களிடையேயும் பெற்றோர்களிடையேயும் ஏற்பட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. இவைதவிர பல்வேறு சுற்றாடல் சார் செயற்பாடுகளிலும் போட்டிகளிலும் எமது மாணவர்களும் ஆசிரியர்களும் அன்றாடம் பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்று வருகின்றனர். பாடசாலையின் சிறந்த சுற்றாடல், அழகிய தோற்றம் என்பவற்றில் எமது கல்லூரி தொடர்ந்தும் முதனிலை பெற்று வருகின்றமை எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். கல்லூரியில் முன்னெடுக்கப்பட்டு வரும் பௌதிக வள மேம்பாடும் சுற்றாடல் சார் செயற்பாடுகளும் இதற்கு உறுதுணை புரிகின்றன. பாடசாலையின் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் பெற்றோர்கள் இதற்காக ஆற்றிவரும் பங்களிப்பு அளப்பரியதாகும்.

கல்லூரியின் நீண்ட நாள் கனவாக இருந்து வந்த அழகிய முகப்பு மாடம் அமைக்கும் செயற்றிட்டம் சிறப்பாகச் செய்து முடிக்கப்பட்டுள்ளது. கனடாவாழ் எமது கல்லூரி மைந்தர்களான திருமதி.பவானி விஜயேந்திரன், திரு.ஜெயபாலன் நடராஜா, திரு.திரவியம் கண்ணன், திரு.ஜீவரத்தினம் கிருஷ்ணபிள்ளை, திரு.காந்தரூபன் கார்த்திகேசு, திரு.மோகனதாஸ் நற்குணம், திரு.சுரேன் கதிர்காமநாதன், திரு.விக்னேஸ்வரராசா ஏரம்பமூர்த்தி, திரு.விஜயேந்திரன் சோமசுந்தரம், திரு.விநாயகமூர்த்தி சரவணமுத்து ஆகியோரின் அனுசரணையுடன் பழைய மாணவர் சங்கத்தினரால் சுமார் 13 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு இவ்வாண்டில் வட மாகாண மாண்புமிகு முதலமைச்சர் உயர்திரு.க.வி.விக்னேஸ்வரன் அவர்களாலும் வட மாகாண கௌரவ கல்வியமைச்சர் உயர்திரு.த.குருகுலராஜா அவர்களாலும் கடந்த 2014.06.23 இல் திறந்து வைக்கப்பட்ட அழகிய முகப்பு மாடமும் இக்கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவர்களான Dr. முருகையா (மருத்துவத்துறை விஞ்ஞானி - ஐக்கிய அமெரிக்கா) அவர்களும் Dr.ந.பரம்சோதி அவர்களும் வழங்கிய நிதியுதவியினால் அமைக்கப்பட்ட முன்புற அழகிய தொடர் மதிலும் கல்லூரிக்கு அழகு சேர்ப்பதுடன் ஒரு நிறைவுத் தோற்றத்தினையும் வழங்கியுள்ளதெனின் மிகையாகாது. இதற்காகவும் விளையாட்டு மைதானத்தின் பிரிப்பு வேலி அமைப்புக்காகவும் Dr. முருகையா அவர்கள் 1,299,900/- இனையும் Dr.ந.பரம்சோதி அவர்கள் ரூபா. 500,000/- இனையும் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திக் கணக்கிற்கு அனுப்பி பேருதவி புரிந்தனர். விளையாட்டு மைதானத்திற்கென அழகிய பிரிப்பு வேலி அமைக்கும் வேலைகள் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளன. லண்டனிலிருந்து வருகை தந்திருந்த மற்றுமொரு பழைய மாணவரான Dr.கௌரிபாலன் அவர்கள் கல்லூரியின் அபிவிருத்திக்கென ரூபா.100,000/- இனை வழங்கியிருந்தார். கல்லூரியின் தேவையறிந்து இப்பழைய மாணவர்கள் வழங்கிய உதவிக்கும் உதாரண குணத்திற்கும் கல்லூரிச் சமூகம் நன்றி தெரிவித்துக்கொள்கின்றது. இவ்வருட (2014) வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விழாவில் Dr.ந.பரம்சோதி அவர்களும் திருமதி பரம்சோதி அவர்களும் முதன்மை விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்து மாணவர்களுக்கு பரிசில்களையும் வாழ்த்துக்களையும் வழங்கியமையையிட்டு நாம் பெரிதும் மன நிறைவடைகின்றோம். அத்துடன் இவ்வருட தைத்திங்கள் பட்டிப்பொங்கல் தினத்தன்று கல்லூரிக்கு குடும்ப சகிதம் வருகை தந்து பட்டிப்பொங்கல் நிகழ்வில் விருப்போடும் மகிழ்வோடும் கலந்து மகிழ்வித்த Dr. முருகையா குடும்பத்தாருக்கும் அவர்களை இங்கு அழைத்துவந்து எம்மோடு இணைய வைத்த யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் Dr.ஆ.கேதீஸ்வரன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்தக் கொள்கின்றோம்.

எமது கல்லூரியின் கல்வித்தர விருத்திக்கும் பௌதிகவள விருத்திக்கும் எமது கல்வித் திணைக்களம் சார் அலுவல்கள் வலய ரீதியிலும் மாகாண ரீதியிலும் மாகாணக் கல்வி அமைச்சு ரீதியிலும் சிறந்த பங்களிப்பினை நல்கி வருகின்றனர் குறிப்பாகக் கல்வித் தர விருத்திக்கு வடமராட்சி வலய மட்டத்திலும் வடமாகாண மட்டத்திலும் திணைக்களத் தலைவர்களும் துறைசார் அதிகாரிகளும் வழங்கிவருகின்ற ஆலோசனைகளுக்கும் ஒத்துழைப்புக்களுக்கும் எமது கல்லூரிச் சமூகம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது. தேசிய மட்டத்தில் கல்வி அமைச்சு அதிகாரிகள் எமது கல்லூரிக்கு வழங்கி வருகின்ற ஆதரவும் அனுசரணையும் சிறப்பாகவுள்ளன. ஆசிரிய வளம், பௌதிக வளம் என்பவற்றை இடையறாது சீர்செய்து வழங்கியுதவுவதுடன் திருத்தம் முதலான தேவைகளுக்கு நிதியுதவி வழங்கி அளப்பரிய

சேவையாற்றி வருகின்றனர். இவ்வருடம் (2014) எமது கல்லூரியில் திருத்த வேலைகளுக்காக மத்திய கல்வி அமைச்சினால் ரூபா.1,000,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வொதுக்கீட்டுக்கு உதவிய மத்திய கல்வி அமைச்சின் பாடசாலைகள் வேலைகள் பிரிவினருக்கு குறிப்பாக அதன் பிரதிப் பணிப்பாளர் Dr.அபேசுந்தர அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள். அதே போன்று எமது கல்லூரிக்குத் தேவையான ஆசிரிய ஆளணியினரையும் பணியாளர்களையும் நியமிப்பதற்கு அரும்பணியாற்றி வரும் தேசிய பாடசாலைகள் பணிப்பாளர் திருவாளர் ரஞ்சித் சந்திரசேகர அவர்களுக்கும் எமது கல்லூரியின் பழைய மாணவனும் கல்வியமைச்சின் தேசிய பாடசாலைகள் கிளையின் முகாமைத்துவ அலுவலர் திருவாளர் மகாலிங்கம் அவர்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

எமது கல்லூரியின் வளர்ச்சிப் பணிகளிலே பங்கெடுத்துக்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் நலன் விரும்பிகள் என்றென்றும் எமது பாராட்டுக்குரியவர்களாவர். இவ்வகையில் இவ்வாண்டு (2014) பண்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திருமதி.விஜயகலா மகேஸ்வரன் அவரகள் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கென ரூபா.50,000/- இனையும் எமது கல்லூரியின் பழைய மாணவரும் பொறியியலாளரும் கௌரவ வடக்கு மகாணசபை உறுப்பினராகிய உயர்திரு.ந.சிவயோகன் அவர்கள் தனது மாகாண நிதியொதுக்கீட்டிலிருந்து ரூபா.150,000/- இனை அலுவலக கணனித் தொகுதி கொள்வனவுக்காகவும் ஒதுக்கீடு செய்துள்ளனர். இவர்களது காலமறிந்த உதவிக்காக கல்லூரிச் சமூகத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் எமது கல்லூரிப் பெற்றோர்களான திரு. சுதாகரன் திரு.இரவீந்திரன் ஆகியோர் ஆண், பெண் கனிஷ்ட அணியினருக்கான பாண்ட் உபகரணங்களை ( 2 தொகுதிகள்) இவ்வாண்டின் ஆரம்பத்தில் அன்பளிப்புச் செய்து மாணவர்களின் திறன் வளர்ச்சிக்கு பேருதவி புரிந்தனர். அத்துடன் கனிஷ்ட பாண்ட் அணியினருக்கான கோலவுடைகளை கூட்டாக அன்பளிப்புச் செய்த பெற்றோருக்கும் உதைபந்தாட்ட அணியினருக்கான கோலவுடைகளை அன்பளிப்புச் செய்த கல்லூரியின் முன்னாள் ஆசிரியை திருமதி.தயா சயந்தன் அவர்களுக்கும் கபடி அணியினருக்கான கோலவுடைகளை அன்பளிப்புச் செய்த திரு.சர்வானந்தா அவர்களுக்கும் உதைபந்தாட்ட அணியினருக்கான மற்றொரு தொகுதி கோலவுடைகளை வழங்கிய மாணவன் செல்வன் சசிகுமார் கௌசிகன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் எமது சுகாதார மேம்பாட்டுக்கான 2 பிளாஸ்டிக் குப்பைக் கொள்கலன்களை கொள்வனவு செய்வதற்கு பகுதியளவில் (ரூபா.12,000/-) நிதியுதவியளித்த பெற்றார் திரு.பா.பாலேந்திரன் அவர்களுக்கும் கல்லூரிச் சமூகத்தின் சார்பில் நன்றிகளை உரித்தாக்குகின்றோம்.

கடந்த அண்டின் இறுதியிலும் இந்த ஆண்டிலும் பல சுற்றாடல் மற்றும் பௌதிகவள மேம்பாட்டுத் திட்டங்கள் கல்லூரியில் முன்னெடுக்கப்பட்டன. இவ்வருடம் செப்ரெம்பர் மாதத்தில் பாரிய சுகாதார மேம்பாட்டுச் செயற்திட்டமாக குப்பைகளை அகற்றி பாரிய மீன்வளர்ப்புக் குளத்தினை மீட்டெடுத்த செயற்பாடு ஓர் வரலாற்று நிகழ்வாக பதிவாகின்றது. அத்துடன் பாடசாலை சுற்றாடல் மேம்பாட்டுக்கு ஒரு பெரும் சவாலாக அமைகின்ற கழிவகற்றல் பொறிமுறைக்கு அனுசரணையாக பெண்கள் மாணவர் விடுதி அமைந்துள்ள

காணியில் பொருத்தமான இடத்தில் பாரிய குப்பைக் குழி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இவற்றுடன் இவ்வருடத்தில் "Wash Project" வேலைத்திட்டத்தில் எமது கல்லூரியில் இரு நீர்க்குழாய்த் தொகுதிகள் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்டன. இதற்கான செயற்றிட்டத்தினருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது கல்லூரியின் இனிய நலன் விரும்பிகளான "சமூகச் சுடர்" திரு.நடேசு பாஸ்கரன் மற்றும் அவர்தம் பாரியார் திருமதி.இந்திராணி பாஸ்கரன் ஆகியோர் மனமுவந்து எமது கல்லூரிக்கென அமைத்துத் தந்த வள்ளுவர் மாடத்தின் சுற்றுப் புறத்தினைப் பல இலட்சம் ரூபா செலவில் கலைவக்கல் பதித்து வெளவியால் வேலியிட்டு அழகுற அமைத்துத் தந்துள்ளனர் இது வள்ளுவர் மாடத்திற்கும் கல்லூரி முன்றலுக்கும் அழகு சேர்க்கும் அம்சமாகும். அத் தம்பதியினரது ஆக்கபூர்வமான உதவிக்கும் கல்லூரி அபிமானத்திற்கும் கல்லூரிச் சமூகத்தின் சார்பில் உயர்வான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

புகழ்பூத்த இப்பாடசாலையானது கல்லூரிச் சமூகத்தின் நீண்டகால விருப்பின் அடிப்படையிலும் காலத்தின் தேவை கருதியும் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் கல்வி அமைச்சினால் 2014.01.01 திகதியிலிருந்து "மத்திய கல்லூரி" என்னும் பெயர் மாற்றம்' பெற்றுள்ளமை கல்லூரியின் கீர்த்திநாமத்தினை மேம்படுத்தியதோடு மொழிரீதியான பெயர் மாறுபாட்டு பிரச்சினைக்கும் தீர்வாக அமைந்தது. இன்று இக்கல்லூரியானது இலங்கைத் திருநாட்டில் இருக்கக்கூடிய அதியுயர் பெயரும் அதியுயர் தரமும் (1AB-Super) அதியுயர் வளவசதிகளும் அதியுயர் முகாமைத்துவக் கட்டமைப்பும் கொண்ட ஒரு கல்லூரியாகப் பரிணமித்துள்ளது. இதற்கு என்னோடு தோளோடு தோள் நின்று உழைத்த பிரதி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், பாட இணைப்பாளர்கள், துறைசார் பொறுப்பாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர் தலைவர்கள், மாணவர்கள் ஆகியோரின் அர்ப்பணிப்பான சேவையும் கடின உழைப்புக்களுமே காரணமாயமைந்தன. அத்துடன் பழைய மாணவர் சங்கத்தினரின் உள்நாட்டு வெளிநாட்டு அமைப்புக்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திக் குழு, பெற்றோர், நலன் விரும்பிகள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், அரசியற் தலைவர்கள், அனுசரணை வழங்கும் நிறுவனங்கள் முதலியோர் இதற்கு உறுதுணை வழங்கினர். நெல்லியடி மத்திய கல்லூரியின் எழுச்சியும் வளர்ச்சியும் ஒரு கூட்டு முயற்சியின் வெளிப்பாடாகும். இக்கூட்டும் செயலூக்கமும் என்றும் தொடரவும் இதனால் கல்லூரி நிலைத்து நிற்கும் அபிவிருத்தி நிலையினை எய்தவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதோடு இயற்கையும் எமக்கு என்றும் சாதகமாக அமையவும் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் கல்லூரித் தாய்மீது அக்கறையும் அபிமானமும் குறைவின்றிக் கொள்ளவும் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி.
செ.சேதுராஜா
அதிபர்

## Student Details As at -19.06.2014

| Grade | | Tamil Medium | | | English Medium | | | Total | | | Grade | | Grade Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Boys | Girls | Total | Boys | Girls | Total | Boys | Girls | Total | B | G | |
| 6A | | 14 | 20 | 34 | 3 | 2 | 5 | 17 | 22 | 39 | | | |
| 6B | | 21 | 9 | 30 | | | | 21 | 9 | 30 | | | |
| 6C | | 21 | 10 | 31 | | | | 21 | 10 | 31 | | | |
| 6D | | 33 | | 33 | | | | 33 | 0 | 33 | 92 | 41 | 133 |
| 7A | | 7 | 16 | 23 | 5 | 9 | 14 | 12 | 25 | 37 | | | |
| 7B | | 24 | 12 | 36 | | | | 24 | 12 | 36 | | | |
| 7C | | 23 | 7 | 30 | | | | 23 | 7 | 30 | | | |
| 7D | | 17 | 10 | 27 | | | | 17 | 10 | 27 | | | |
| 7E | | 27 | | 27 | | | | 27 | 0 | 27 | 103 | 54 | 157 |
| 8A | | 10 | 14 | 24 | 7 | 7 | 14 | 17 | 21 | 38 | | | |
| 8B | | 29 | 4 | 33 | | | | 29 | 4 | 33 | | | |
| 8C | | 27 | 5 | 32 | | | | 27 | 5 | 32 | | | |
| 8D | | 23 | 6 | 29 | | | | 23 | 6 | 29 | | | |
| 8E | | 17 | 7 | 24 | | | | 17 | 7 | 24 | 113 | 43 | 156 |
| 9A | | 16 | 13 | 29 | 7 | 4 | 11 | 23 | 17 | 40 | | | |
| 9B | | 28 | 9 | 37 | | | | 28 | 9 | 37 | | | |
| 9C | | 26 | 7 | 33 | | | | 26 | 7 | 33 | | | |
| 9D | | 28 | | 28 | | | | 28 | 0 | 28 | 105 | 33 | 138 |
| 10A | | 17 | 11 | 28 | 3 | 5 | 8 | 20 | 16 | 36 | | | |
| 10B | | 22 | 13 | 35 | | | | 22 | 13 | 35 | | | |
| 10C | | 23 | 9 | 32 | | | | 23 | 9 | 32 | | | |
| 10D | | 31 | | 31 | | | | 31 | 0 | 31 | 96 | 38 | 134 |
| 11A | | 14 | 15 | 29 | 1 | 2 | 3 | 15 | 17 | 32 | | | |
| 11B | | 19 | 6 | 25 | | | | 19 | 6 | 25 | | | |
| 11C | | 13 | 11 | 24 | | | | 13 | 11 | 24 | | | |
| 11D | | 22 | | 22 | | | | 22 | 0 | 22 | 69 | 34 | 103 |
| 11R | | 20 | 15 | 35 | | | | 20 | 15 | 35 | 20 | 15 | 35 |
| 2016 | 12A | 17 | 15 | 32 | | | | 17 | 15 | 32 | 17 | 15 | 32 |
| | 12C | 17 | 14 | 31 | | | | 17 | 14 | 31 | 17 | 14 | 31 |
| | 12 $T_1$ | 27 | 0 | 27 | | | | 27 | 0 | 27 | | | |
| | 12 $T_2$ | 25 | 0 | 25 | | | | 25 | 0 | 25 | 91 | 20 | |
| | 12 $T_3$ | 20 | 4 | 24 | | | | 20 | 4 | 24 | | | |
| | 12 $T_4$ | 19 | 16 | 35 | | | | 19 | 16 | 35 | | | 111 |
| | 12M | 14 | 7 | 21 | | | | 14 | 7 | 21 | 14 | 7 | 21 |
| | 12 B | 9 | 11 | 20 | | | | 9 | 11 | 20 | 9 | 11 | 20 |
| 2015 | 12A | 24 | 8 | 32 | | | | 24 | 8 | 32 | 24 | 8 | 32 |
| | 12C | 16 | 10 | 26 | | | | 16 | 10 | 26 | 16 | 10 | 26 |
| | 12T1 | 23 | 0 | 23 | | | | 23 | 0 | 23 | | | |
| | 12T2 | 15 | 7 | 22 | | | | 15 | 7 | 22 | 38 | 7 | 45 |
| | 12M | 17 | 4 | 21 | | | | 17 | 4 | 21 | 17 | 4 | 21 |
| | 12B | 9 | 9 | 18 | | | | 9 | 9 | 18 | 9 | 9 | 18 |
| 2014 | 12A1 | 16 | 8 | 24 | | | | 16 | 8 | 24 | | | |
| | 12A2 | 16 | 4 | 20 | | | | 16 | 4 | 20 | 32 | 12 | 44 |
| | 12C1 | 13 | 7 | 20 | | | | 13 | 7 | 20 | | | |
| | 12C2 | 14 | 8 | 22 | | | | 14 | 8 | 22 | 27 | 15 | 42 |
| | 12M1 | 9 | 4 | 13 | | | | 9 | 4 | 13 | | | |
| | 12M2 | 11 | 5 | 16 | | | | 11 | 5 | 16 | 20 | 9 | 29 |
| | 12Sci | 12 | 5 | 17 | | | | 12 | 5 | 17 | 12 | 5 | 17 |
| Total | | 915 | 375 | 1290 | 26 | 29 | 55 | 941 | 404 | 1345 | 941 | 404 | 1345 |

## Details of Acadamic Staff in National school up to 2014.07.25

| S.No | Full Name With (Mr/Mrs/Miss/ect) | Nature of Appointment with Subject (Ex .Maths traineed) | Appropriate Service (SLEAS,SLPS,SLTS) | Date of App.to Present School | Subjcet and Grades teaching at present school |
|---|---|---|---|---|---|
| 1 | Mr.S.Sethurajah | Principal | SLES | 2001.13.02 | Supervison |
| 2 | Mr.G.Krishnakumar | Deputy - Principal | SLPS | 2010.06.15 | Supervison |
| 3 | Mr.A.Ariyaratnam | Graduate - Geog | SLTS - I | 04.10.1989 | Geo - G.13 |
| 4 | Mrs.R.Sivarajah | Graduate - Maths | SLTS - I | 23.08.1989 | Com.Mat G.13 |
| 5 | Mrs.M.Natgunalingam | Graduate - Bio | SLTS - I | 05.06.1992 | Biology G.12,13 |
| 6 | Mr.S.Saravanabavan | Graduate - Accounts | SLTS - I | 11.01.1993 | Accounts- G.12,13 |
| 7 | Mr.S.Uruthirakumar | Graduate - Phy | SLTS - I | 20.05.2002 | Physics G.12,13 |
| 8 | Mrs.R.Kulavaratharajah | Maths trained | SLTS - I | 2009.11.04 | Maths 6-11 |
| 9 | Miss.Y.Kanthppu | Science trained | SLTS - I | 2010.05.25 | Science 6-11 |
| 10 | Mrs.P.Rajasegaran | Graduate - Sec.Maths | SLTS - I | 2010.05.06 | Maths 6-11 |
| 11 | Mrs.S.Rajendran | Art trained | SLTS - I | 2011.05.30 | Art 6-11 |
| 12 | Mrs.R.Arulanantham | Pri.Trained | SLTS - I | 2008.01.01 | Tamil 6-13 |
| 13 | Mrs.S.Sribavan | Dance Trained | SLTS -2. I | 1995.02.01 | Dance 6-11 |
| 14 | Mrs.S.Pathmakumaran | Graduate -General | SLTS -2. I | 2010.05.05 | Tamil 6-11 |
| 15 | Mr.V.Mariyathas | Maths trained | SLTS -2. I | 2011.02.14 | Maths 6-11 |
| 16 | Mrs.V.Suthash | Graduate -Economics | SLTS -2. II | 2000.01.12 | Econom 12-13 |
| 17 | Mr.V.Suthersan | Maths Trained | SLTS -2. II | 2005.02.18 | Maths 6-11 |
| 18 | Mrs.S.Sriskumar | Science Trained | SLTS -2. II | 2002.05.20 | Science 6-11 |
| 19 | Mrs.M.Vigneswaran | Graduate -Chemistry | SLTS -2. II | 1999.09.03 | Chemistry 12-13 |
| 20 | Miss.S.Rajiny | Christianity trained | SLTS -2. II | 2006.11.16 | Roman Catholicam 6-11 |
| 21 | Mr.P.Selvakumar | Graduate -Agri.Sci | SLTS -2. II | 2008.02.13 | Agri & Bio.Sys 6-12 |
| 22 | Mrs.M.Kannathasan | Graduate | SLTS -2. II | 2010.01.01 | Commerce 6-13 |
| 23 | Mr.K.Gunasunthar | N.D.T.Sci | SLTS -2. II | 2010.02.15 | Science 6-11 |
| 24 | Mrs.G,Ravikumar | Graduate -Com | SLTS -2. II | 2011.5.9 | Accounts G.12,13 |
| 25 | Mr.N.Pirabakaran | Traited Com | SLTS -2. II | 2011.03.23 | Commerce 6-13 |

| S.No | Full Name With (Mr/Mrs/Miss/ect) | Nature of Appointment with Subject (Ex .Maths traineed) | Appropriate Service (SLEAS,SLPS,SLTS) | Date of App.to Present School | Subjcet and Grades teaching at present school |
|---|---|---|---|---|---|
| 26 | Mr.K.Uthayaseelan | Graduate -Economics | SLTS -2. II | 2009.01.05 | Econom 12-13 |
| 27 | Mr.K.Nimalanathan | N.D.T- Primary | SLTS -2. II | 2012.01.04 | reading PGDE in JUC |
| 28 | Mr.S.Gnanachchelvan | Graduate -Sci.(Eng-Medium) | SLTS -2. II | 2005.10.07 | Chemistry 12-13 |
| 29 | Mr.K.Ampikaipakan | Graduate -Maths | SLTS -2. II | 2008.04.07 | Maths 6-11 |
| 30 | Mr.P.Varatharajah | Graduate -Phy | SLTS -2. II | 2009.08.06 | Physics G.12,13 |
| 31 | Miss.S.Vasanthy | Graduate | SLTS -2. II | 2009.01.01 | H.Culture 12-13 |
| 32 | Mr.S.Mathusoothanan | ICT-Trained | SLTS -3. I | 2008.07.28 | ICT 6-13 |
| 33 | Mrs.D,Dusyanthan | Graduate -Biology | SLTS -3. I | 2002.07.15 | Science 6-11 |
| 34 | Mrs.T.Thavanesan | Graduate General | SLTS -3. I | 2005.11.10 | Tamil 6-13 |
| 35 | Mr.V.Nagarajah | Science trained | SLTS -3. I | 2009.09.07 | Science 6-11 |
| 36 | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| 37 | Mrs.S.Jeyanthan | N.D.T maths | SLTS -3. I | 2012.09.05 | Maths 6-11 |
| 38 | Mrs.S.Senthuran | Graduate -Dance | SLTS -3. I | 2011.08.02 | Dance 6-11 |
| 39 | [illegible] Miss.S.Vinothini | Graduate -Music | SLTS -3. I | 2014.09.15 | Music 6-11 |
| 40 | Mrs.K.Ampuyan | Graduate -Dance | SLTS -3. I | 2011.07.27 | Dance 6-11 |
| 41 | Miss.J.Manoranjan | N.D.T. ICT.Eng | SLTS -3. I | 2011.11.08 | ICT 6-13 |
| 42 | Mrs.P.Vaikunthatheepan | N.D.T. ICT.Eng | SLTS -3. I | 2011.11.08 | ICT 6-13 |
| 43 | Miss.S.Antony | N.D.T. Li.Sci | SLTS -3. I | 2011.11.08 | English & Library 6-13 |
| 44 | Miss.R.Arasavoldan | N.D.T. Food&Tec | SLTS -3. I | 2011.11.08 | H.Econo mic 6-11 |
| 45 | Mr.S.Antony | N.D.T. P.T | SLTS -3. I | 2011.11.20 | Phy-Edu G.12,13 |
| 46 | Mr.T.Thavachchelvan | N.D.T. PT | SLTS -3. I | 2012.01.04 | Phy-Edu G.12,14 |
| 47 | Mrs.P.Muralitharan | N.D.T. Sp.Edu | SLTS -3. I | 2012.01.03 | Tem.Transfare |
| 48 | Mrs.A.Piratheepan | Graduate -Music | SLTS -3. I | 2012.01.09 | Music 6-11 |

| S.No | Full Name With (Mr/Mrs/Miss/ect) | Nature of Appointment with Subject (Ex .Maths traineed) | Appropriate Service (SLEAS,SLPS, SLTS) | Date of App.to Present School | Subjcet and Grades teaching at present school |
|---|---|---|---|---|---|
| 49 | Mrs.K.Sivathasan | N.D.T. Drama, Sanasuma Certificate in Counselling Service | SLTS -3. I | 2012.06.05 | Counselling 6-13 |
| 50 | Mr.T.Mayuran | Graduate -Art | SLTS -3. I | 2012.09.06 | Art 6-13 |
| 51 | Miss.S.Meera | Graduate -ICT | SLTS -3. I | 2012.06.29 | ICT 6-13 |
| 52 | Miss.N.Kathiravelu | Graduate Drama | SLTS -3. I | 2011.08.01 | Drama & tamil 6-13 |
| 53 | Mrs.V.Rakupathy | N.D.T. English | SLTS -3. I | 05.09.2012 | English 6-13 |
| 54 | Mr.J.Sasitharan | N.D.T. Maths | SLTS -3. I | 2013.01.02 | Maths 6-11 |
| 55 | Mrs.J.Sanjeeban | Graduate Drama | SLTS -3. I | 2012.10.24 | Drama & tamil 6-11 |
| 56 | Mrs.L.Priyalingan | Graduate -Music | SLTS -3. I | 2012.01.03 | Music 6-11 |
| 57 | Mr.P.Partheepan | Graduate -Art | SLTS -3. I | 2012.06.13 | Art 6-11 |
| 58 | Mr.K.Kiritharan | Graduate -Geog | SLTS -3. I | 08.11.2012 | Geo - 6.13 |
| 59 | Mrs.S.Balakumaran | Graduate -Bio | SLTS -3. I | 2013.01.15 | Science (Eng) 6-11 |
| 60 | Mrs.S.Rajkumar | Trainee teacher in teachers' college-History | SLTS -3. II | 2012.01.03 | **Studying TC-Palaly** |
| 61 | Mr.R.Ragulan | N.D.T. Maths | SLTS -3. I | 03.06.2013 | Maths 6-11 |
| 62 | Mr.S.Sugarnan | N.D.T. Sp.Edu | SLTS -3. I | 01.04.2013 | Sp.Edu 6-13 |
| 63 | Mr.V.Krishnavel | Graduate -Dance | SLTS -3. I | 03/07/2013 | Tamil & Hindu. 6-11 |
| 64 | Mr.S.Rakunanthan | N.D.T. Maths(Eng) | SLTS -3. I | 24.04.2011 | Maths 6-11 |
| 65 | Mr.T.Suberyan | BSc(Hon) | SLTS -3. I | 2013.10.07 | Com.Maths |
| 66 | Mr.J.Jatheepan | BA | SLTS -3. I | 2013.10.07 | Logic |
| 67 | Mr.P.Thayaparan | BSc | SLTS -2.II | 2014.01.02 | Eng.Tech&Phy. |
| 68 | Mr.N.Jeyarupan | BA | SLTS -2.II | 2014.01.13 | Tamil, Hindu.cul |
| 69 | Mr.K.Arudchelvan | N.D.T. Science | SLTS -3. I | 2006.05.02 | Science |
| 70 | Miss.Y.Mayoori | N.D.T. Agriculture | SLTS -3. I | 2014.07.09 | Agriculture |
| 71 | Miss.K.Nithiya | N.D.T. English | SLTS -3. I | 2014.07.09 | English |
| 72 | Mrs.K.Nivethika | N.D.T. English | SLTS -3. I | 2014.07.09 | English |

**Non Academic Staff**


01. Mrs.K.Ponnaiah (Lab Assist.)
02. Mr.V.Sivasuntharam (Watcher)
03. Mr.A.Kanthasamy (Cook)
04. Mr.A.Thavarasa (Garden Lab.)
05. Miss.P.Sivarajani (Office Assist.) (Casual)
06. Mr.M.Jesunesan (Labourer) (Casual)
07. Mr. Uthayashran (Labourer) (Casual)

## மாணவர் தலைவர்கள் - 2014/ 2015

- **சிரேஷ்ட மாணவர் தலைவன் - செல்வன் கலாமணி மதனாகரன்**
- **உதவி சிரேஷ்ட மாணவர் தலைவி - செல்வி.அபிரா கிருஷ்ணகுமார்**


01. செல்வன். கிருஷ்ணராஜா சாய்ரூபன்
02. செல்வன். ஸ்ரீதரன் கார்த்திக்
03. செல்வன். விஜயமாறன் சத்தியப்பிரியன்
04. செல்வன். தபேந்திரராஜா அனோஜன்
05. செல்வன். யோகலிங்கம் சுயந்தன்
06. செல்வன். ரவிக்குமார் செந்தூரன்
07. செல்வன். பரராஜசிங்கம் ராம்ஜி
08. செல்வன். சிறீகாந்தன் சுஜீபன்
09. செல்வன். திருஞானஸ்ரீபன் அலன்றொக்ஷி
10. செல்வன். சிற்றம்பலம் கோகுலன்
11. செல்வன். திரவியராசா நிருஷன்
12. செல்வன். பாலச்சந்திரன் ஆதர்ஷன்
13. செல்வன். நாகேந்திரன் திருபரன்
14. செல்வன்.பஸ்தியன் சந்தோஷ்
15. செல்வி. விதுர்ஷா சண்முகநாதன்
16. செல்வி. ராஜமனோகரி நேசலிங்கம்
17. செல்வி. துவாரகா தர்மகுலசிங்கம்
18. செல்வி. விதுர்ஷா லிங்கரட்ணம்
19.. செல்வி. ஆரணி மகாகணபதி
20. செல்வி. மயூரியா பிரசாத்
21. செல்வி. துஷானி நாகராஜா
22. செல்வி. அஜிதா அறிவழகன்
23. செல்வன். விஜயரட்ணம் தனன்
24. செல்வன். புஸ்பராசா ஹம்சன்
25. செல்வன். சிவனேஸ்வரன் விதுசன்
26. செல்வன். குலச்சந்திரன் கிருஷாந்
27. செல்வன். கங்காதரன் ரூபதரன்
28. செல்வன். கிருஷ்ணமூர்த்தி அபிநயன்
29. செல்வன். பாலகிருஷ்ணன் வினித்குமார்
30. செல்வன். தபேந்திரராசா அஜிந்தன்
31. செல்வன். ஜெயரட்ணம் சிந்துகன்
32. செல்வன். ஸ்ரீகாந்தன் விதுசன்
33. செல்வன். சிவப்பிரகாசம் துஷிதன்
34. செல்வன். பரமேஸ்வரன் நிருஷன்
35. செல்வி. அநிந்திதை பிரபாகரன்
36. செல்வி. விதுர்ஷா லோகேஸ்வரன்
37. செல்வி. உஜானா நேசலிங்கம்
38. செல்வி. அனோஜா புஸ்பலிங்கம்
39. செல்வி. துஷிதா மனோகரன்
40. செல்வி. ஜெயசுதா லிங்கரட்ணம்
41. செல்வி. வைஷ்ணவி சுப்பிரமணியக் குருக்கள்
42. செல்வி. கலைமகள் தேவகுமாரன்
43. செல்வி. ஆர்த்தியாயினி சுப்பிரமணியம்
44. செல்வி. சம்யா ரஞ்சன்
45. செல்வி. கீர்த்திகா லக்னேஸ்வரன்
46. செல்வி. ஹம்சத்வனி ஜோதீஸ்வரன்
47. செல்வி. கிருஷியா சிவானந்தன்
48. செல்வி. லக்சனா சிவப்பிரகாசம்

## மாணவர் எண்ணிக்கை (கடந்த 5 ஆண்டுகளில்)




| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| ஆண் | 712 | 794 | 870 | 885 | 941 |
| பெண் | 289 | 323 | 363 | 386 | 404 |
| மொத்தம் | 1001 | 1117 | 1233 | 1271 | 1345 |

## ஆசிரியர் எண்ணிக்கை (கடந்த 5 ஆண்டுகளில்)




| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| ஆண் | 27 | 25 | 27 | 30 | 31 |
| பெண் | 25 | 33 | 40 | 39 | 40 |
| மொத்தம் | 52 | 58 | 67 | 69 | 71 |

**கல்லூரியின் முகாமைத்துவக்குழு**

01. திரு.செ.சேதுராஜா (அதிபர்)
02. திரு.க.கிருஷ்ணகுமார் (பிரதி அதிபர்)
03. திரு.அ.அரியரத்தினம் (பிரதி அதிபர்)
04. திருமதி.இ.சிவராஜா (பகுதித் தலைவர்)
05. திருமதி.ம.நற்குணலிங்கம் (பகுதித் தலைவர்)
06. திரு.ச.உருத்திரகுமார் (பகுதித் தலைவர்)
07. திரு.ச.சரவணபவன் (பகுதித் தலைவர்)
08. திருமதி.பி.இராஜசேகரன் (பகுதித் தலைவர்)
09. திரு.வீ.சுதர்சன்
10. திரு.நா.பிரபாகரன்
11. திரு.செ.ஞானச்செல்வன்
12. திருமதி.சௌ.பத்மகுமாரன்
13. திரு.கு.அம்பிகைபாகன்
14. திருமதி.ச.இராசேந்திரன்

**மாணவர் ஒழுக்காற்று நடவடிக்கைக் குழு**

01. திரு.செ.சேதுராஜா (அதிபர்)
02. திரு.க.கிருஷ்ணகுமார் (பிரதி அதிபர் - நிர்வாகம்)
03. திரு.அ.அரியரத்தினம் (பிரதி அதிபர் - கல்வி அபிவிருத்தி)
04. திருமதி.இ.சிவராஜா
05. திரு.ச.சரவணபவன்
06. திரு.வீ.சுதர்சன்

## மாணவர் மன்றங்களும் பொறுப்பாசிரியர்களும்

| | மன்றம் / கழகம் | பொறுப்பாசிரியர் |
|---|---|---|
| 1 | இந்துமாமன்றம் (பொது) | செல்வி.க.யோகாம்பிகை |
| 2 | கிறிஸ்தவ மன்றம் (பொது) | திருமதி.ரா.தவக்குமார் |
| 3 | ஆங்கில மன்றம் (பொது) | திருமதி.வி.ரகுபதி |
| 4 | விளையாட்டு மன்றம் | திரு.த.தவச்செல்வம் |
| 5 | உயர்தர மாணவர் மன்றம் | திருமதி.இ.சிவராஜா |
| 6 | உயர்தர விஞ்ஞான மன்றம் | திரு.செ.ஞானச்செல்வன் |
| 7 | உயர்தர கலை வர்த்தக மன்றம் | திரு.க.உதயசீலன் |
| 8 | இடைநிலை தமிழ் மன்றம் | திருமதி.இ.அருளானந்தம் |
| 9 | இடைநிலை கணித -விஞ்ஞான மன்றம் | திரு.வீ.சுதர்சன் |
| 10 | இடைநிலை ஆங்கில மன்றம் | திருமதி.வி.ரகுபதி |
| 11 | கனிஸ்ட தமிழ் மன்றம் | திருமதி.சௌ.பத்மகுமாரன் |
| 12 | கனிஸ்ட கணித -விஞ்ஞான மன்றம் | செல்வி.க.யோகாம்பிகை |
| 13 | கனிஸ்ட தமிழ் மன்றம் | திருமதி.இ.குலவரதராஜா |
| 14 | அனர்த்த முகாமைத்துவக் கழகம் | திரு.க.உதயசீலன் |
| 15 | சுற்றாடல் கழகம் | திரு.வே.நாகராஜா |
| 16 | வலு முகாமைத்துவக் கழகம் | செல்வி.க.யோகாம்பிகை |
| 17 | தகவல் தொழினுட்பக் கழகம் | திரு.சி.மதுசூதனன் |

# பாட ரீதியான பரிசுக்குரியவர்கள் (2013)

| இல | முழுப் பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| | | தரம் 6 |
| 1 | செல்வி ரவிக்குமார் சங்கவி | தமிழ், சைவநெறி, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும், புவியியல், நடனம், செயன்முறைத் தொழில்நுட்பம், சுகாதாரமும் உடற்கல்வியும் |
| 2 | செல்வி கொலித்திரன் ஜலின் இஷானி | கத்தோலிக்கத் திருமறை, சங்கீதம் |
| 3 | செல்வன் அம்பிகைபாகன் வர்ஷன் | கணிதம்(EM) |
| 4 | செல்வி சண்முகநாதன் நிவாஷிகா | விஞ்ஞானம்(EM) |
| 5 | செல்வி ஆனந்தராஜா ஆர்த்தி | வாழ்க்கைததேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும்(EM) |
| 6 | செல்வி குகராசா அனிதா | புவியியல்(EM), சுகாதாரமும் உடற்கல்வியும்(EM) |
| 7 | செல்வி மணிவண்ணன் கீர்த்திகா | நாடகமும் அரங்கியலும் |
| 8 | செல்வி சௌந்தரராசா யதுஷனா | சித்திரம் |
| | | தரம் 7 |
| 9 | செல்வி இராஜகுமார் விவேகா | சைவநெறி, வரலாறு, கணிதம்(EM), புவியியல்(EM), விஞ்ஞானம்(EM), வாழ்க்கைததேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும்(EM), சுகாதாரமும் |
| 10 | செல்வி கிருஷ்ணதாஸ் அர்ச்சனா | தமிழ், விஞ்ஞானம், வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும், புவியியல், சுகாதாரமும் உடற்கல்வியும், செயன்முறைத் தொழில்நுட்பம் |
| 11 | செல்வி ஜெயகாந்தன் கஜிதா | கத்தோலிக்கத் திருமறை |
| 12 | செல்வி யேசுதாஸ் சாம்பவி | ஆங்கிலம், நடனம் |
| 13 | செல்வன் இன்பழகன் மிதுனன் | கணிதம் |
| 14 | செல்வன் இராஜ்குமார் தர்சன் | சித்திரம் |
| 15 | செல்வி சிவலிங்கம் மதுர்ஷா | சங்கீதம் |
| 16 | செல்வன் குலேந்திரன் பிரகலாதன் | நாடகமும் அரங்கியலும் |
| | | தரம் 8 |
| 17 | செல்வி பிரபாகரன் கேதாரணி | தமிழ், சைவநெறி, வரலாறு, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும், புவியியல், சுகாதாரமும் உடற்கல்வியும், சங்கீதம் |
| 18 | செல்வி நாகராசா அனற் அஜித்ரா | கத்தோலிக்கத் திருமறை |
| 19 | செல்வன் லிங்கரட்ணம் சிவகாந் | கணிதம்(EM), விஞ்ஞானம்(EM) |
| 20 | செல்வன் சிவானந்தம் அனிருதன் | வாழ்க்கைததேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும்(EM), புவியியல்(EM), |
| 21 | செல்வன் தட்சணாமூர்த்தி அபிஷன் | சித்திரம் |
| 22 | செல்வி கிருஷ்ணயோகன் ஆதனா | நடனம், செயன்முறைத் தொழில்நுட்பம் |

| | | |
|---|---|---|
| | **தரம் 9** | |
| 23 | செல்வி சிவகுமார் லக்ஷிகா | ஆங்கிலம், கணிதம்(EM), விஞ்ஞானம்(EM),வாழ்க்கைத்தேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும்(EM), புவியியல்(EM), சுகாதாரமும் உடற்கல்வியும்(EM), நடனம் |
| 24 | செல்வன் பரராஜசிங்கம் பிரவின் | வரலாறு, வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும், புவியியல், சுகாதாரமும் |
| 25 | செல்வி சிவராசா நிதர்ஷனா | தமிழ், சங்கீதம் |
| 26 | செல்வன் யோகராசா பிரசாந்தன் | சைவநெறி |
| 27 | செல்வன் நாகேஸ்வரன் திஷான் | கத்தோலிக்கத் திருமறை |
| 28 | செல்வன் தேவகுமாரன் செந்தில்குமரன் | கணிதம் |
| 29 | செல்வன் சிவசுந்தரம் நிரோசன் | விஞ்ஞானம் |
| 30 | செல்வன் சிவராஜா பிரியேந்திரா | சித்திரம் |
| 31 | செல்வி சுப்பிரமணியக்குருக்கள் ரம்யா | செயன்முறைத் தொழில்நுட்பம் |
| | **தரம் 10** | |
| 32 | செல்வி தவேந்திரன் அபிஷேகா | சைவநெறி, ஆங்கிலம், கணிதம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் |
| 33 | செல்வி கிருஷ்ணகுமார் யுவேக்கா | தமிழ் |
| 34 | செல்வன் சுபாஸ்கரன் சுனேத் | சைவநெறி, வரலாறு, விஞ்ஞானம், புவியியல் |
| 35 | செல்வி பாலேஸ்வரன் பவித்ரா | கணிதம்(EM), விஞ்ஞானம்(EM) |
| 36 | செல்வி இரத்தினசிங்கம் நிலானி | சைவநெறி, சுகாதாரமும் உடற்கல்வியும் |
| 37 | செல்வன் விஜயகுமார் போல்ராஜ் | கத்தோலிக்கத் திருமறை(N.R.C) |
| 38 | செல்வன் அன்ரன் மரியதாஸ் மதுஜன் | கத்தோலிக்கத் திருமறை(R.C) |
| 39 | செல்வி சண்முகநாதன் கிருஷிகா | வர்த்தகமும் கணக்கியலும் |
| 40 | செல்வன் கனகசபாபதி இளங்கரன் | செயன்முறைத் தொழில்நுட்பம் |
| 41 | செல்வி கௌதமன் சிநேகா | நடனம் |
| 42 | செல்வி ஜெகநாதன் சஜிந்தா | நாடகமும் அரங்கியலும் |
| 43 | செல்வன் சிவஞானசுந்தரம் பிரியராஜ் | நாடகமும் அரங்கியலும் |
| 44 | செல்வன் சிதம்பரப்பிள்ளை மிதுஜன் | மனைப் பொருளியல் |
| 45 | செல்வன் சிவயோகநாதன் கிரிஷாந் | சங்கீதம் |
| 46 | செல்வி.முருகதாஸ்குருக்கள் கார்த்திகா | தமிழ் இலக்கிய நயம் |
| | **தரம் 11** | |
| 47 | செல்வி மனோகரன் துஷிதா | ஆங்கிலம், கணிதம்(EM), விஞ்ஞானம்(EM), வர்த்தகமும் கணக்கியலும்(EM), தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்(EM), ஆங்கில இலக்கிய நயம் |
| 48 | செல்வன் விஜயரட்ணம் தனன் | தமிழ், சைவநெறி, வரலாறு, விஞ்ஞானம், புவியியல், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், தமிழ் இலக்கிய நயம் |
| 49 | செல்வி யோகேந்திரன் அஜந்தா | கத்தோலிக்கத் திருமறை(R.C) |
| 50 | செல்வி வசந்தகலாதன் சாலிகா | கத்தோலிக்கத் திருமறை(N.R.C) |

| | | |
|---|---|---|
| 51 | செல்வன் நவரட்ணராஜா துளசிகன் | வரலாறு(EM) |
| 52 | செல்வி சுப்பிரமணியம் ஆர்த்திகாயினி | கணிதம் |
| 53 | செல்வி புஷ்பலிங்கம் அனோஜா | வர்த்தகமும் கணக்கியலும் |
| 54 | செல்வன் குணேந்திரசீலன் சக்தீஷன் | சுகாதாரமும் உடற்கல்வியும் |
| 55 | செல்வி லோகேஸ்வரன் விதுர்ஷா | நடனம் |
| 56 | செல்வி நடராசா நிவேதிதா | சங்கீதம் |
| 57 | செல்வி கதிர்காமநாதன் அனுஷா | நாடகமும் அரங்கியலும் |
| | **தரம் 12** | |
| 58 | செல்வன் கலாமணி மதனாகரன் | இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல் |
| 59 | செல்வி லிங்கரட்ணம் விதுர்ஷா | இணைந்த கணிதம் |
| 60 | செல்வன் கிருஷ்ணராஜா சாயிரூபன் | உயிரியல் |
| 61 | செல்வி நேசலிங்கம் இராஜமனோகரி | இரசாயனவியல் |
| 62 | செல்வி பிரசாத் மயூரிகா | கணக்கீடு, வணிகக் கல்வி, பொருளியல் |
| 63 | செல்வன் சிறீகாந்தன் சுஜீபன் | வணிகக் கல்வி |
| 64 | செல்வி ஜெயக்குமார் நிவேதா | வணிகப் புள்ளி விபரவியல் |
| 65 | செல்வன் பாமதேவன் டக்ஷன் | அளவையியல, புவியியல் |
| 66 | செல்வி சிவஞானம் தனுஷ்ஜா | இந்துநாகரீகம் |
| 67 | செல்வன் பிரபாகரன் சசிகரன் | பொறியியல் தொழில்நுட்பம் |
| 68 | செல்வி சண்முகசுந்தர் அகிம்ஷா | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம், உயிரியல் தொழில்நுட்பம் |
| | **தரம் 13** | |
| 69 | செல்வன் ஜெயபாலன் கீர்த்தனன் | இணைந்த கணிதம் |
| 70 | செல்வன் பரமசிவம் அஜந்தனன் | கணக்கீடு |
| 71 | செல்வி சிவானந்தம் சோமினி | வணிகக் கல்வி |
| 72 | செல்வி செல்வரத்தினம் கீர்த்தனா | பொருளியல் |
| 73 | செல்வன் கங்காதரன் தருபன் | தமிழ், அளவையியல் |
| 74 | செல்வி தங்கராசா தர்ஷிகா | சங்கீதம் |
| 75 | செல்வி சத்தியசீலன் துஷாரா | புவியியல் |

**வகுப்பு முதல் நிலை மாணவர்களுக்கான பரிசில்கள்**

| இல | வகுப்பு | பெயர் | இல | வகுப்பு | பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | 6A | செல்வி ரவிக்குமார் சங்கவி | 13 | 12M | செல்வன் கலாமணி மதனாகரன் |
| 2 | 6B | செல்வி கண்ணதாசன் தனுஸ்கா | 14 | 12C | செல்வி ஜெயக்குமார் நிவேதா |
| 3 | 6C | செலவி குகதாசன் நிவேகா | 15 | 12A | செல்வன் பாமதேவன் டக்ஷன் |
| 4 | 7A | செல்வி இராஜகுமார் விவேகா | 16 | 12T1 | செல்வன் பிரபாகரன் சசிகரன் |
| 5 | 7C | செல்வன் அரவிந்தன் அபிநந்தன் | 17 | 12T2 | செல்வி சண்முகசுந்தர் அகிம்ஷா |
| 6 | 8A | செல்வி பிரபாகரன் கேதாரணி | 18 | 13A1 | செல்வி சத்தியசீலன் துஷாரா |
| 7 | 9A | செல்வி சிவகுமார் லக்ஷிகா | 19 | 13A2 | வெல்சன் தில்லைநாதன் பிரசன்னா |
| 8 | 9B | செல்வன் அரியநாயகம் அனோஜன் | 20 | 13C1 | செல்வரத்தினம் கிர்த்தனா |
| 9 | 10A | செல்வி தவேந்திரன் அபிஷேகா | 21 | 13C2 | செல்வன் பரமசிவம் அஜந்தனன் |
| 10 | 10B | செல்வன் மகாராசா யதுர்ஜன் | 22 | 13M1 | செல்வி செல்வரத்தினம் கீர்த்தனா |
| 11 | 11A | செல்வன் விஜயரட்ணம் தனன் | 23 | 13M2 | செல்வன் சிவஞானசுந்தரம் ஜெனோசன் |
| 12 | 12B | செல்வன் கிருஷ்ணராஜா சாயிரூபன் | 24 | 13B | செல்வன் பாலசுப்பிரமணியம் அரவிந்தன் |

| 5ம் தர புலமைப் பரிசில் பரீட்சை-2013 இல் சித்தியடைந்தவர்களுக்கா பரிசில்கள் | | | |
|---|---|---|---|
| **இல** | **மாணவர் பெயர்** | **இல** | **மாணவர் பெயர்** |
| 1 | செல்வன் சிறீஸ்குமார் கஜன் | 11 | செல்வி செல்வராசா சுகன்யா |
| 2 | செல்வி சுப்பிரமணியம் மயூரவேணி | 12 | செல்வன் சிவானந்தன் அபிநயன் |
| 3 | செல்வி பிரான்சிஸ்யோகநாதன் ஜொறோஷினி | 13 | செல்வன் இராதாகிருஷ்ணன் சாயிகீஷன் |
| 4 | செல்வன் பாஸ்கரன் மனோஜ் | 14 | செல்வன் பாலேந்திரன் திவீந்திரன் |
| 5 | செல்வன் பிரபாகரன் துசிகரன் | 15 | செல்வராசா நிதுஷா |
| 6 | செல்வி சிவராசா சங்கீகா | 16 | செல்வி அமிர்தலிங்கம் சசிரேகா |
| 7 | செல்வன் கிருஷ்ணதாஸ் அனுஷன் | 17 | செல்வி சற்குணராசா நிவேதா |
| 8 | செல்வி சதீஸ்குமார் தனுஷிகா | 18 | செல்வி மதியழகன் திரிஷா |
| 9 | செல்வி மெய்யழகன் ஷார்மி | 19 | செல்வன் ஜெகதீஸ்வரன் ஜெயசங்கர் |
| 10 | செல்வி தியாகராசா கிருஷா | | |

| கல்வி சார் இணைப்பாடவிதான செயற்பாடுகள்-2013 | | |
|---|---|---|
| **மாணவர் பெயர்** | **மாகாண மட்டம்** | **தேசிய மட்டம்** |
| **கணிதப் புதிர் போட்டி** | | |
| தவேந்திரன் அபிசேகா | 1ம் இடம் | 3ம் இடம் |
| **ஆங்கில தினப் போட்டி** | | |
| சிவகுமார் லக்சிகா(Dictation) | 1ம் இடம் | - |
| தவேந்திரன் அபிசேகா(Role Play) | 2ம் இடம் | - |
| கிருஷ்ணகுமார் யுவேகா(Role Play) | | |
| ரவீந்திரன் சௌமியா(Role Play) | | |
| சிவபாலசுப்பிரமணியம் அபிநயா(Role Play) | | |
| கருணதாஸ் பவதாரணி(Role Play) | | |
| **விஞ்ஞான புதிர் போட்டி** | | |
| தவேந்திரன் அபிசேகா | 2ம் இடம் | - |
| **சமூக விஞ்ஞான புதிர் போட்டி** | | |
| சத்தியசீலன் துஷாரா | 2ம் இடம் | - |

| க.பொ.த(சா.த) பரீட்சை -2013 பெறுபேற்றுக்கான பரிசில்கள் | | |
|---|---|---|
| இல | புலமைப்பரிசில் பெறுவோர் | |
| 1 | செல்வன் விஜயரட்ணம் தனன் | அதி சிறந்த பெறுபேறு(9A) |
| 2 | செல்வி லோகேஸ்வரன் விதுர்ஷா | |
| 3 | செல்வி நேசலிங்கம் உஜானா | |
| 4 | செல்வன் பாலகிருஷ்ணன் வினித்குமார்(7A,2B) | ஊக்குவிப்பு பரிசு |
| 5 | செல்வன் செல்வரட்ணம் சங்கீத் | |

| | சிறந்த பெறுபேறு பெற்றோர் விபரம் | |
|---|---|---|
| 1 | செல்வன் கிருஷ்ணமூர்த்தி அபிநயன் | 8A, 1B |
| 2 | செல்வி பிரபாகரன் அநிந்திதை | 8A, 1B |
| 3 | செல்வி தேவகுமாரன் கலைமகள் | 8A, 1B |
| 4 | செல்வி மனோகரன் துஷிதா | 8A, 1C |
| 5 | செல்வி சுப்பிரமணியம் வைஸ்ணவி | 8A, 1C |
| 6 | செல்வி லிங்கரட்ணம் ஜெயசுதா | 8A, 1C |
| 7 | செல்வன் நவரட்ணராஜா துளசிகன் | 8A, 1S |
| 8 | செல்வன் புஷ்பராசா கம்சன் | 7A,1B,1C |
| 9 | செல்வன் சிவனேஸ்வரன் விதுசன் | 7A,1B,1C |
| 10 | செல்வி புஸ்பலிங்கம் அனோஜா | 7A,1B,1S |
| 11 | செல்வி ரஞ்சன் ரம்யா | 7A,1B,1C |
| 12 | செல்வி ஜோதீஸ்வரன் ஹம்சத்வனி | 7A,1B,1C |
| 13 | செல்வி சுப்பிரமணியம் ஆர்த்தியாயினி | 7A,1B,1C |
| 14 | செல்வி இலங்கேஸ்வரன் கீர்த்திகா | 6A,2B,1C |
| 15 | செல்வன் குலச்சந்திரன் கிருசாந் | 6A,2B,1S |

## க.பொ.த உயர்தரப் பரீட்சை – ஓகஸ்ட் 2013 பெறுபேற்றின் அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்கள் விபரம்

**கணிதப் பிரிவு:**

01. செல்வன் சிவயோகநாதன் துவாரகன் - பொறியியல்
02. செல்வன் கிருஷ்ணயோகன் பிரணவன் - மென்பொருள் பொறியியல்
03. செல்வன் சிவானந்தன் சுகந்தன் - முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும்
04. செல்வன் அருளானந்தசிவம் மோகன்லால் - முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும்
05. செல்வன் பாலசிங்கம் டிலக்ஷன் - முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும்
06. செல்வன் பரமானந்தன் ஹரிநிதர்சன் - கணக்கிடலும் தகவல் முறைமைகளும்
07. செல்வன் ஞானவடிவேல் சர்மிலன் - கணக்கிடலும் தகவல் முறைமைகளும்
08. செல்வன் விக்னேஸ்வரமூர்த்தி முகுந்தன் - தகவல் முறைமை
09. செல்வன் நேசராசா அங்கதன் - பௌதிக விஞ்ஞானம்
10. செல்வன் சிவநாதன் அருண்குமார் - பௌதிக விஞ்ஞானம்
11. செல்வி செல்வராசா மயூரா - பிரயோக விஞ்ஞானம்

**உயிரியல் பிரிவு:**

01. செல்வி செல்வராசா சஞ்சிகா - மருத்துவம்
02. செல்வி சிறீஸ்குமார் ஷாகிரத்தியா - ஊடு கதிர் படமெடுப்பு
03. செல்வன் புவிராஜசிங்கம் பிரவீணன் - யுனானி மருத்துவம்
04. செல்வி விஜயராஜா கலைவாணி - யுனானி மருத்துவம்
05. செல்வன் உதயசூரியன் கஜன் - யுனானி மருத்துவம்
06. செல்வி நேசராசா ஆதித்தியா - யுனானி மருத்துவம்
07. செல்வி பாலசுப்பிரமணியம் பிரியதர்சினி - உயிரியல் விஞ்ஞானம்
08. செல்வி விஸ்வலிங்கம் பிரியா - உயிரியல் விஞ்ஞானம்
09. செல்வன் கனகலிங்கம் பிருந்தாபன் - விவசாயம்

**வர்த்தகப் பிரிவு:**

01. செல்வி அம்பிகாநிதி துளசி - முகாமைத்துவம்
02. செல்வி சிவநேசன் சிந்துஜா - முகாமைத்துவம்
03. செல்வன் கிரிதரன் நிருபன் - முகாமைத்துவம்
04. செல்வன் ஆனந்தராசா ஜிகானந் - முகாமைத்துவம்
05. செல்வி வேலுப்பிள்ளை பிரசன்யா - முகாமைத்துவம்
06. செல்வன் மகேந்திரன் மிதுரன் - முகாமைத்துவம்

**கலைப்பிரிவு:**

01. செல்வி சஞ்சிபா கந்தசாமி - சட்டம்
02. செல்வி சின்னையா பிரியங்கா - கலை
03. செல்வன் இராஜலிங்கம் ஈஸ்வரன் - கலை
04. செல்வி அருட்பிரகாசம் நிரோஜினி - கலை
05. செல்வி நாகராசா நர்மதா - கலை

**இணைப்பாடவிதானம் – விளையாட்டு தொடர்பான விபரங்கள் (2013)**

மெய்வல்லுநர் போட்டி - 2013

13 வயது ஆண் - உயரம் பாய்தல்
ச. கிஷோக் - வலய மட்டம் 1ம் இடம், மாவட்ட மட்டம் 1ம் இடம், மாகாண மட்டம் 1ம் இடம்

17 வயது பெண் - உயரம் பாய்தல்
இ.பிரியவர்ணா - வலய மட்டம் 2ம் இடம், மாவட்ட மட்டம் 2ம் இடம், மாகாண மட்டம் 4ம் இடம்

19 வயது பெண் - குண்டு போடுதல்
நி.சாமந்தி - வலய மட்டம் 1ம் இடம், மாவட்ட மட்டம் 1ம் இடம், மாகாண மட்டம் 2ம் இடம்

கிரிக்கட் 19 வயது பெண்கள் - வலய மட்டம் 3ம் இடம், மாவட்ட மட்டம் 2ம் இடம், மாகாண மட்டம் 2ம் இடம்

| | | |
|---|---|---|
| ம.தர்மினி | கு.பிரதீபா | சி.தயானி |
| த.தர்சிகா | பா.விதுசா | இ.ரம்சிகா |
| சு.றஞ்சனா | சி.சுதா | ந.கிருத்திகா |
| லோ.தர்ஷா | நி.சாமந்தி | இ.பிரியவர்ணா |
| இ.துசாரா | வ.ஷாலிகா | இ.கோபிகா |

எறிபந்து 19 வயது ஆண்கள் - வலய மட்டம் 1ம் இடம், மாவட்ட மட்டம் 1ம் இடம், மாகாண மட்டம் 1ம் இடம்

| | | |
|---|---|---|
| ச.கோகுலன் | சி.ஜெயபாரத் | க.சிந்துஜன் |
| இ.அபிராம் | அ.டினோஜன் | தி.ஜெனன் |
| அ.திவாகர் | ச.கௌசிகன் | ப.நிதர்சன் |
| யோ.மதுசன் | உ.அனுசாந்தன் | அ.கீர்த்தனன் |

சதுரங்கம் 19 வயது ஆண்கள் - வலய மட்டம் 2ம் இடம், மாவட்ட மட்டம் 3ம் இடம், மாகாண மட்டம் 3ம் இடம்

| | | |
|---|---|---|
| சி.சக்தீசன் | யோ.சுஜந்தன் | த.டினேஷ் |
| கி.அபிநயன் | கு.கிருஷாந் | ஜெ.அனோஷன் |
| த.அனோஜன் | இ.பிரசாந் | |

2013ம் ஆண்டு 16 வயது பெண்கள் இலங்கை பாடசாலை கபடி சம்மேளன தேசிய மட்டப் போட்டி 1ம் இடம்.

2013ம் ஆண்டு 16 வயது ஆண்கள் இலங்கை பாடசாலை கபடி சம்மேளன தேசிய மட்டப் போட்டி 3ம் இடம்.

2013ம் ஆண்டு 19 வயது பெண்கள் தேசிய மட்ட கபடிப் போட்டி 1ம் இடம்.

# பரிசளிப்பு நிதியங்கள்

01.மருத்துவம் :- திருமதி .பரஞ்சோதி நினைவாக வழங்கப்படுகிறது

வழங்குபவர் : **திரு.நடேசு பாஸ்கரன்** அவர்கள் (தொழிலதிபர்)
பரிசு பெறுபவர் : *செல்வி சஞ்சிகா செல்வராசா*

02.பொறியியல் :- திருமதி .பாக்கியம் ஐயாத்துரை நினைவாக வழங்கப்படுகிறது

வழங்குபவர் : **திரு.இளையதம்பி ஐயாத்துரை** அவர்கள்.(முன்னாள்அரசஅதிபர்)
பரிசு பெறுபவர் : *செல்வன் கிருஷ்ணயோகன் பிரணவன்*

03.கலை :- திரு பொன்னம்பலம் கந்தசாமி நினைவாக வழங்கப்படுகிறது

வழங்குபவர் : **திரு பொன்னம்பலம் குமாரசாமி** அவர்கள்(சட்டத்தரணி)
பரிசு பெறுபவர் : *செல்வி சஞ்சிபா கந்தசாமி*

04. முகாமைத்துவம் : திருமதி செல்வரட்ணம் ஐயாத்துரை நினைவாக வழங்கப்படுகின்றது.

வழங்குபவர் :- **திரு ஐயாத்துரை சிவநாதன்** அவர்கள்(மருதம்)
பரிசு பெறுபவர் :- *செல்வி அம்பிகாநிதி துளசி*

05. பல்கலைக் கழகத்திற்குத் தெரிவானோர்: புலமைப் பரிசில் பெறுவோரைத் தவிர்த்து

வழங்குபவர் :- **திரு.சண்முகசுந்தரம் அவர்கள்** (செல்லமுத்தூஸ்)

2013ஆம் ஆண்டு - 18 பேர்

06. பாடசாலை மட்டப் பரிசுகள் : **அமரர் சிதம்பரம்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராஜா நினைவாக.**

வழங்குவோர் :- **திரு.சு.ஆறுமுகம்** குடும்பத்தினர் (நெல்லியடி)

07. இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்: (விளையாட்டு)
**அமரர். தனலக்ஷ்மி சங்கரப்பிள்ளை அவர்கள் நினைவாக வழங்கப்படுகின்றது.**

வழங்குவோர் :- **குடும்பத்தினர்**

08. இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்: **அமரர் சுப்பிரமணியம் மகேந்திரா** அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்படுகின்றது.
(தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களின் பெறுபேறுகளுக்காக)

வழங்குபவர் :- **திருமதி.மகேஸ்வரி மகேந்திரா** அவர்கள் (முன்னாள் பிரதி அதிபர்)

09. க.பொ.த (சா.த) பரீட்சையில் அதி சிறந்த பெறுபேறு பெற்ற மாணவருக்கானது.
10. க.பொ.த (சா.த) பரீட்சையில் தேர்ச்சிப் பெறுபேறு (ஊக்குவிப்பு)
பெற்ற மாணவர் (இருவர்)
(**அமரர் சுப்பிரமணியம் நாகேந்திரன் அவர்களின் நினைவாக** வழங்கப்படுகின்றது.)

வழங்குபவர் :- **திருமதி சந்திரவதனா நாகேந்திரன்** அவர்கள்

சிறந்த பெறுபேற்றுக்கான பரிசுபெறுபவர் - செல்வன்.விஜயகுமார் தனன்
செல்வி. உஜானா நேசலிங்கம்
செல்வி.விதுர்ஷா லோகேஸ்வரன்

ஊக்கவிப்பு பரிசுபெறுவோர் - செல்வன்.பா.வினித்குமார்
செல்வன். சங்கீர்த்தனன்

11. க.பொ.த (சா.த) பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவருக்கானது.
**அமரர். கந்தையா வீரகத்தி அவர்களின் நினைவாக** வழங்கப்படுகின்றது.
(2012 இலிருந்து)

வழங்குவோர் :- **குடும்பத்தினர்.** (நெல்லியடி)

சிறந்த பெறுபேற்றுக்கான பரிசுபெறுபவர் - 19 பேர்

12. *இணைப்பாடவிதானம் - சாரணியத்தில் சிறப்பாகச் செயற்பட்ட மாணவர்களுக்கான பரிசுகள்*
**அமரர்.வே.வீரபத்திரபிள்ளை அவர்களின் நினைவாக** வழங்கப்படுகின்றது.

வழங்குவோர் : குடும்பத்தினர்.
பரிசு பெறுபவர் - *19 மாணவர்கள்.*

13. *க.பொ.த.(உ/த) மாணவர்களுக்கான பொதுத் தகவல் தொழினுட்ப பாடத்தில் (GIT) அதிவிசேட சித்தி பெற்ற மாணவர்களுக்கான பரிசு*

வழங்குவோர் : **E SOFT** நெல்லியடி நிறுவனத்தினர்.
பரிசு பெறுபவர் - *19 மாணவர்கள்.*

# கல்லூரிக் கீதம்

இராகம் : சங்கராபரணப்பிரியா ... தாளம் : திஸ்ரலகு

<u>முதல்நிலை</u>

வாழ்க வாழ்க வாழ்கவே – எங்கள் கலைக்
கோயில் என்றும் வாழ்க வாழ்க வாழ்கவே

<u>நடுநிலை</u>

நெல்லியடி மத்திய கல்லூரி ஆலயம்
நிகரில்லாத கலையின் ஊற்று குருகுலபீடம்

(வாழ்க)

<u>இறுதிநிலை</u>

கண்விழித்த கமலமன்ன கவர்ச்சிபொங்கு பார்வையும்
கனல்தெறித்து வீறுகொள்ளும் ஆண்மையோங்கு நெஞ்சமும்
எண்ணிலாத இலட்சியங்கள் சூழுமிதய வேகமும்
விண்முகட்டிற் பாயவைக்கும் விந்தையறிவு நிலையமாய்

(வாழ்க)

இன்பவாழ்வு பூக்கும்வண்ணம் இனியகலை விஞ்ஞானமும்
என்றும் எங்கும் உண்மை காணும் பேறுகொள் மெய்ஞ்ஞானமும்
அன்பினாலே வெற்றியீட்டும் அரியபண்பு நெறிகளும்
ஆக்கியெம்மில் ஆற்றலேற்றும் அறிவு நீர்வீழ்ச்சியாய்

(வாழ்க)

கல்விப்பண்ணை வளரநாளும் களைபிடுங்கி அறிவுநீர்
மெள்ளமெள்ளச் சொரிந்து நிற்கும் மேன்மைமிக்க குரவர்கள்
செல்வம் என்று போற்றும் எங்கள் உயிரில் வாழும் செந்தமிழ்
அல்லல் நீக்கி ஆட்சிகாண அருள்வழங்கு வாணியாய்

(வாழ்க)

என்பும் உரியம் பிறர்க்கு என்ற இனியகொள்கை அழகிலே
அன்புநெறியிற் பணிகள் ஆற்றி அருமைத்தமிழின் நிழலிலே
தென்பு பெற்றுத் தெய்வஒளியில் திசைகடந்த புகழிலே
இன்பம் காட்டும் வாழ்வு நல்கும் இணையில் சாந்தி நிலையமாய்

(வாழ்க)

வைத்தகாலைப் பின்வையாமல் வாழ்விலே முன்னேறுவோம்
வையவாழ்வு சொர்க்கமென்று வாகைசூடிக் கூறுவோம்
நித்தம் எம்மைக் காக்க என்று நிமலன்பாதம் சூடுவோம்
அத்தன் கருணை வெள்ளம்மூழ்கி அமரகீதம் பாடுவோம்

(வாழ்க)

– க வீ.